4

# கிறிஸ்தவனுக்குத் தெய்வீகத்தேர்வுகள்

## (எபேசியர் 4:1–6)

*மிகத் தீவிரமான காட்சியை விளக்கப்படுத்தும் திருமறை அதிகாரங்களில் ஒன்று 1 ராஜாக்கள் 18. உத்திரவிடும் கெம்பீரத் தோற்றம் கொண்டவரும், இந்த நிகழ்ச்சியில் தேவனுடைய சார்பாக பேசியவருமான, நபர் எலியா. தேவனுடைய தீர்க்கதரிசிகளெல்லாரும் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அஞ்ஞான (விக்கிரக) தெய்வமான பாகால் மற்றும் விக்கிரகத் தோப்புகள், "அவனுடைய ராணி" எனும் தேவதை அஸேரா, ஆகியவைகளின் வணக்கம் ஊக்கப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த நேரம். யெகோவா தேவனை பின்பற்றும்படி தெரிந்து கொண்டவர்களை மிகக் கொடூரமாக குறிவைத்து வதை செய்து, அநேகர் கொல்லப்பட்டார்கள். விக்கிரக வணக்கத்தார்கள் மீது தண்டனையை வருவிக்கும் பொருட்டு மூன்று வருட வறட்சியை தேவன் அனுப்பினார், இது தேவன் மீதும் அவரைப் பின்பற்றுவோர் மீதும் மேலும் கசப்பைக் கூட்டக் கூடியதாக இருந்தது. உறுதியாக ஒன்றான மெய் தேவனை கடமையுணர்வோடு அறிக்கையிடுவது அவ்வளவு எளிதான நேரமாக இருக்க வில்லை. எல்லாவற்றிலும் நம்பிக்கையிழந்திருந்த நேரத்தில், எலியா தோன்றி அஞ்ஞான ஆசாரியர்களுக்கு முன்பாக சவாலோடு கூடிய ஒரு போட்டியை அறிவித்தார் (18:1-18).*

*யேகோவா தேவனுடைய பக்கத்தில் ஒரு தீர்க்கதரிசி மட்டும் நிற்க, பாகால் அஸேரா தோப்பு விக்கிரக தீர்க்கதரிசிகள் (பூசாரிகள்) ஆகிய 850 பேரை கர்மேல் பர்வதத்தில் அந்த போட்டியிலே எதிர்கொண்டார் (18:19). போட்டி துவங்குவதற்கு முன்பு, கூட்டத்துக்கு முன்பாக எலியா நின்று பேசத்துவங்கி: "நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்? கர்த்தர் தெய்வமானால், அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால், அவனைப் பின்பற்றுங்கள் என்றான்" (18:21). இப்படியாக போட்டி துவக்கம் பெற்றது. எலியா உண்மையான தேவனின் வல்லமையை விளக்கப்படுத்தி பேசினார் (18:30-38). அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாயினர், "ஜனங்கள் எல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து; 'கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்' " என்றார்கள் (18:39). ஜனங்கள் ஒரு முடிவெடுத்தார்கள், இந்தமுடிவு அவர்களை செயல்பட வைத்தது (18:40).*

*திருமறை முழுவதிலும், தேவன் தம்மைப் பின்பற்றி வருவதைத் தெரிந்து கொள்ளும்படி தேவன் கேட்டார். தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் ஜீவனைக் கண்டார்கள் (உபாகமம் 30:19; 32:47). தேவனிடத்திலே ஒப்புக்கொடுத்து தனது*

*நட்புறவைப்பற்றிக் கொண்டிருப்பவர்களின் ஆத்துமா பிழைக்கும் என்று வசனம் போதிக்கிறது (காண்க எரேமியா 38:20; ஆமோஸ் 5:4; ஆபகூக் 2:4; யோவான் 3:15, 16, 36).*

*தேவனுக்குக் கீழ்ப்படிவதால் மட்டுமே நித்திய ஜீவன் உண்டென்பதை கிறிஸ்தவன் அறிந்திருப்பதால் அவன் தேவனைப் பின்பற்றுவதைத் தெரிந்து கொண்டான் (யோவான் 5:25-29). விசுவாசிக்கிறவர்கள் "இருளில்" நடவாமல் "ஜீவ ஒளியைக்" காண்பார்கள் என்று கர்த்தர் சொன்னார் (யோவான் 8:12). இருளிலிருந்து ஒளிக்கு நீங்கள் கடந்து போதல் உங்களில் நிகழ்ந்துள்ளது ஏனெனில் உங்களுடைய வாழ்க்கைக்காக தேவனை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படியும்படி நீங்கள் தெரிவு செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்தத் தெரிவின் விளைவு உங்கள் வாழ்க்கையில் - முன்பு நீங்கள் செய்திராத காரியங்களை இப்பொழுது செய்யும்படி முடிவெடுத்துள்ளீர்கள்! கிறிஸ்தவனாக மாறியதால், உங்கள் மனதை மாற்றி தேவனுடைய கட்டளைகளின்படி செய்யும்படி தெரிந்து கொண்டுள்ளீர்கள். இந்த மாற்றம் உங்கள் மனம் "புதிதாகிறது" என்றழைக்கப்படுகிறது (ரோமர் 12:1, 2). மனமாற்றப்படாதவர்களைக் காட்டிலும் கிறிஸ்தவன் வித்தியாசமாகவும் தீர்க்கமாகவும் முடிவு எடுக்கிறான்!*

*ஒரு நபர் மனமாற்றப்படும்போது ஏற்படும் ஆச்சரியப்படத்தக்க மாற்றத்தைக் குறித்து எபேசியர் 4 லிருந்து 6 வரை, பவுல் விவாதிக்கிறார். எபேசியர் 4:1-6ஐ கவனமாகப் பார்த்து, முடிவு எடுக்கும் செயல் முறை எப்படி மாறுகிறது என்று உன்னிப்பாகக் கவனியுங்கள். இந்த வசனங்களில் கிறிஸ்தவராக மாறுபவர் தனது தெரிவுகளின் முடிவை எடுப்பதிலுள்ள மூன்று பகுதிகளின் சிக்கல்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.*

## கிறிஸ்துவையொத்த எண்ணங்களை தெரிந்துகொள்ளுதல்

*உண்மையான மனமாற்றம் எண்ணங்களை மாற்றுகிறது! மனமாற்றத்திற்கு முன்பு, ஒருவரது எண்ணங்களை சுயநலமும் பெருமையும் ஆதிக்கம் செலுத்தின. மணமாற்றத்துக்குப் பின்பு, ஒருவரது எண்ணங்கள் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிற சிந்தனைகளால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. பவுலின் எண்ணங்கள் சுயநலத்தை விட்டு பிறர் நலத்தின் மீது கவனம் செலுத்தத் தக்கதாக மாற்றம் பெற்றதை அவரின் வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன. ''கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருத்திறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலாத்தியர் 2:20).*

*ஒருவர் மனமாற்றம் பெறும்போது, மறுரூபமாகும் வல்லமை அவரது எண்ணங்களில் உண்டாகும் மாற்றம் ஒநேசிமுவினால் உதாரணமாக விளக்கப்படுகிறது. சுய நலத்தினாலே பிலோமோனின் வீட்டைவிட்டு ஓடிப்போன ஒநேசிமு எனும் அடிமையை "பிரயோஜனமற்றவனாக" மாற்றியது. ஒநேசிமு சுவிசேஷத்தைக் கேட்டு கீழ்ப்படிந்தபோது, அவன் "பிரயோஜனமுள்ளவனாக" மாறினான். இந்த மனிதனுடைய மாற்றத்தின்*

எண்ணங்களை விவரித்து, பவுல் எழுதினார், "கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன். முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன், இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன்" (பிலேமோன் 10, 11).

புதிய கிறிஸ்தவனால் சந்திக்கப்படும் மாபெரும் போராட்டம் தனது எண்ணங்களை மாற்றிக் கொள்வதுதான். தான் சுயத்தை மாத்திரம் எண்ணிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, மற்றவர்களைப் பற்றியும் நினைத்துப் பார்க்க அவன் முற்பட வேண்டும். இதனால்தான் கிறிஸ்து, "ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றுக் கடவன்" என்று சொன்னார் (லூக்கா 9:23).

எபேசியர் 4:1-6ல் மூன்று குறிப்பிடத்தக்க எண்ணங்களின் மாற்றம் குறித்த சிறப்புக் கூறுகள் குறிப்பிடப் படுகின்றன. இந்த எண்ணங்கள் ஒருவர் தேவனுடைய ஊழியத்திற்கென்று தான் பரிசுத்தமாக்கப் பட்டவர் என்பதை உணரும்போது விளைவை (பிரதி பலனை)க் கொடுக்கிறது (காண்க எபிரெயர் 10:20; KJV). இவைகள் உண்மையிலேயே பரிசுத்தத்தின் எண்ணப்போக்கு.

*முதலாவதாக, கிறிஸ்தவர்கள் "தாழ்மையை" கொண்டிருக்க வேண்டும்.* கிறிஸ்துவைப் போல் இருக்க விரும்புகிற ஒரு நபர் எல்லாமே தன் வழியில் தான் நடக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்யமாட்டார்; தனது விருப்பத்துக்கு முன் மற்றவர்களின் ஆர்வத்தை முன்வைப்பார். மனமாற்றப்பட்ட மனம் மற்றவர்கள் தன்னைக் காட்டிலும் சிறப்பான கருத்தைக் கொண்டுள்ளனர் என உணருகிறார். மேட்டிமையான மனம் சண்டையை ஊக்கப்படுத்தும் ஏனெனில் அது பொறாமையும் பெருமையுள்ளதாயிருக்கிறது. மேட்டிமையான நினைவுகள் தாழ்மையை மாசுபடுத்தி விடும் என கிறிஸ்தவனை வசனம் அடிக்கடி எச்சரிக்கிறது (பிலிப்பியர் 2:3; யாக்கோபு 3:14). சில ஜனங்கள் தாழ்மை இருக்க வேண்டிய இடத்தில் பெருமையை வைக்கின்றனர். பெருமையுள்ளவனை பின்னாக நின்று கொண்டு, "நான்தான் அவர்களுக்கு அந்தத் திட்டம் சரியாக வராது என்று சொன்னேன், ஆனால் அவர்கள் நான் சொன்னதை கேட்கவில்லை - இப்ப பாருங்க அவர்களிடத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை!" என்று சொல்ல வைக்கும். அதற்கு மாறாக, கிறிஸ்துவுக்கு ஒப்பான எண்ணமுள்ளவன் தாழ்மையான மனமுள்ளவர்களை உற்சாகப் படுத்தி மேட்டிமை சிந்தைகளை சிலுவையில் அறையச் செய்கிறது.

*இரண்டாவதாக, கிறிஸ்தவர்கள் "சாந்தகுணமுள்ளவர்களாயிருக்க" வேண்டும்.* இந்த எண்ணம் தாழ்மையிலிருந்து வெளிவருகிறது. ஒருவன் சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு தானே முழுமையான அதிகாரம் படைத்தவனல்ல என்று ஏற்றுக்கொண்டு அவனது கருத்துக்கள் எப்போதும் சிறந்தவையல்ல என்று எண்ணுவானேயாகில், பிறகு சாந்த குணம் அவனுக்குள் பெருகத் தொடங்குகிறது. இந்த எண்ணம் ஒருவனை அன்புள்ளவனாகவும், உதவி செய்பவனாகவும், ஊழியம் செய்பவனாகவும், அக்கறையுள்ளவனாகவும், இனிமையாக பழகுகிறவனாகவுமிருக்கச் செய்கிறது. சாந்த குணம் மற்றவர்களின் உணர்வுகளை மதிக்க வைப்பதையும் உள்ளடக்குகிறது (லூக்கா 6:35; ரோமர் 12:10; கொலோசெயர் 3:12யும் காண்க). உண்மையாய் மனமாற்றம் பெற்றவன் சுயநலமியாக குளிர்ந்த தன்மையுடையவனாயிருந்ததை, பரிசுத்த எண்ணத்துடன்

மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யத் தக்க தன்மையை இடமாற்றம் செய்வதால், தன்னைச் சுற்றிலுமிருக்கிறவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறான்.

*மூன்றாவதாக, கிறிஸ்தவர்கள் "பொறுமையானவர்களாயிருக்க" வேண்டும்.* திருமறையின் சில மொழிபெயர்ப்புகள் இதை "நீடிய பொறுமை" எனும் பதத்தைக் கொண்டுள்ளன (காண்க KJV). இந்தப் பதம் புதிய கிறிஸ்தவன் "நெடுங் காலத்துக்கு பொறுமையாயிருக்க ஆயத்தமாயிருக்கிறான்" என்பதைக் குறிப்பிடுகிறது, மற்ற நபரிடம் உள்ள தனது பிரச்சனையை சரி செய்யவோ அல்லது இக்கட்டான சூழ்நிலையின் போதோ இது இடம் பெறும். கிறிஸ்தவ வாழ்க்கை சுலபமான ஒரு வாழ்க்கை அல்ல; அநேக பிரச்சனைகளும் ஏமாற்றங்களும் நேரிடலாம். மனமாற்றப்பட்ட எண்ணமுள்ளவன் நீடிய பொறுமையுள்ளவனாய் இருக்கிறான், ஏனெனில் கர்த்தராகிய தேவன் எல்லாவற்றையும் குறித்து அக்கறை எடுத்துக் கொள்வார் என்பது அவனுக்குத் தெரியும். இந்த எண்ணத்தைத் தான், பவுல் எருசலேமில் சந்திப்பார் என்று கூறப்பட்ட பிரச்சனைகளை கேள்விப் பட்ட போது அவர் விளங்கப் பண்ணினார். அவரோடேகூட பயணம் பண்ணினவர்களும் அந்த சூழ்நிலைகளை சகித்துக் கொண்டு பவுலோடு உறுதிமிகுந்த நம்பிக்கையோடே கூட, "கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது என்றார்கள்!" (நடபடிகள் 21:14ஆ).

இந்த எண்ணங்கள் சுய நலத்தை மேற்கொள்ளவும் சந்தோஷத்தைக் கண்டு பிடிக்கவும், உணர்வுபூர்வமாக மாறி மற்றவர்களின் தோழமையை அனுபவிக்கவும், தேவன் எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்று அறிந்து உபத்திரவங்களை சகித்துக் கொள்ளவும் கிறிஸ்தவர்களுக்கு உதவக் கூடியவைகளாயிருக்கின்றன! அப்படியொரு "அனுசரித்துப் போகும் எண்ணம்" கிறிஸ்தவனை மிகப்பெரிய சமாதானத்தைக் கண்டுபிடிக்க ஏதுவாக்குகிறது! (காண்க பிலிப்பியர் 4:4-8.)

## அன்புணர்வை அர்ப்பணிக்கத் தெரிந்து கொள்ளுதல்

கிறிஸ்தவர்களின் மையமாய்க் காணுகிற விதி அவர்களின் குணாதிசயங்களில் ஒன்றான *அன்பு*. இது பரிசுத்தமாக்கப்பட்ட அன்பு என்பதை மனதில் வையுங்கள். அது பரிசுத்தமானது. இந்த புதிய அன்பு பழைய அன்பின் தன்மையின் இடத்தில் செயல்படுகிறது. மனமாற்றத்துக்குமுன், அன்பு சுயநலமுள்ளதாய் சுய ஆசைகளை திருப்தி செய்வதில் அளவற்ற நேசம் கொண்டதாய் ஆவல் கொண்டிருந்தது. மனமாற்றப்படுவதற்கு முன் ஒருவருடைய அன்பு பின்வரும் சொற்றொடரை ஒத்த வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படக் கூடும். "என்னைக் குறித்து நான் அக்கறை எடுத்துக் கொண்டு ஆக வேண்டும்!" மேலும் "முதல்வனாக நான்தான் இருக்க வேண்டும்!" போன்ற உணர்வுகள். மனமாற்றத்துக்குப்பின் மையக் காட்சியின் கவனம் மாறுகிறது: அன்பு செலுத்தப்படுவது சுய நலத்திற்கல்ல, ஆனால் அடுத்தவர் நலத்திற்காக! இனியும் சுயமென்பது, "வெறுக்கப் பட்டு விட்டது," "இழந்து போய் விட்டது," "சிலுவையில் அறையப்பட்டு விட்டது" என்பதை புதிய கிறிஸ்தவன் கண்டுபிடிக்கிறேன் (காண்க மத்தேயு 16:24; லூக்கா 9:24; கலாத்தியர் 2:20).

மனமாற்றத்தின் இந்த அன்பு நமக்காக தேவன் பாராட்டின அற்புதமான அன்பைப் பின்பற்றுகிறதும் ஊழியஞ் செய்யவும் கொடுக்கவும் செய்கிறதான அன்பு (*agape*) (ரோமர் 5:8). இந்த மனமாற்ற அன்பு

உலகத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. புதிதாய் மனமாற்றப்பட்டவரின் அன்பு வெளிப்படுத்தப் படும்போது, உலகத்தார் அந்த மாற்றத்தைக் கண்டு, அவர்கள் ஆச்சரியமடைவார்கள். குடிகாரனும் கலகக்காரனுமாயிருந்து மனமாற்றப்பட்ட ஒரு மனிதனைப் பற்றிய கதை ஒன்று சொல்லப்படுவதுண்டு. நகரத்திலிருந்த ஒரு சிலர், அந்த மனிதனின் மனமாற்றத்தைக் குறித்து சந்தேகப் பட்டனர். ஒரு வாயாடி அந்த நகரத்திலிருந்தான். அவன் சபையையும், திருமறையையும், தேவனையும் பரியாசம் பண்ணினான். தொல்லை கொடுத்து வந்தவன் மனமாற்றப்பட்டதைப் பற்றி அவன் பேசத்துவங்கினான். அந்தக் கூட்டத்தில் மனமாற்றப் பட்டவனின் மகனும் இருந்தான், அவன் அந்த பரியாச வார்த்தைகளைக் கேட்டான். அவன் முன்பாக வந்து, "தயவு செய்து என்னுடைய தகப்பன் தனது சரியான மனநிலையில் இல்லையென்றோ மற்றவர்களை முட்டாளாக்குகின்றார் என்றோ சொல்லாதிருங்கள். அவர் கிறிஸ்தவனாக மாறினதிலிருந்து, அவர் வித்தியாசப் பட்டவராயிருக்கிறார். அவர் கெட்ட வார்த்தைகளை பயன் படுத்துவதில்லை. இனியும் அவர் யாரையும் அடிப்பதில்லை. சாப்பாட்டு மேஜையில் கூட ஜெபம் செய்கிறார். திருவாளரே, என்னுடைய அப்பா யாரையும் முட்டாளுக்குவதை நான் விரும்பமாட்டேன்; அவர் தன்னுடைய மனநிலையில் சரியில்லாதவராயிருந்தால், தயவு செய்து அவரைத் தனியே விட்டு விடுங்கள் - ஏனெனில் முன்பு இருந்ததைவிட அவருடைய மனம் இப்போது சிறப்பானதாயிருக்கிறது என்றான்!"

புதிதாய் மனமாற்றப்பட்டவர் வித்தியாசமான அன்பைக் காட்ட விரும்புகிறார்! இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவன், பரலோகத்திலிருக்கிற பிதாவின் அன்பைப் போல பரிசுத்தமாக்கப்பட்ட அன்பை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்தவனாக, தேவன் காட்டும் அன்பைப் போலவே நீங்களும் அன்பு காட்ட, எப்படி நீங்கள் அதை விளங்கப் பண்ணக் கூடும்?

## ஆவிக்குரிய தகுதிப் பேராவலைத் தெரிந்து கொள்ளுதல்

இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்பதால் உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு இருக்கிற உண்மையான பேராவல் என்ன? உங்களுக்கு மிகவும் முக்கியமானது எது? கிறிஸ்தவனாக மாறின பிறகு ஒருவரது தகுதி பேராவல் எப்படி அதன் மூலத் தன்மையில் மாற்றம் பெறுகிறது என்பதற்கு பவுல் ஒரு மிக அருமையான உதாரணம். பிலிப்பியருக்கு அவர் எழுதியதில், பவுல் தனது கடந்த கால நினைவுகளை எழுதியதன் மூலம் இந்த மாற்றத்தைத் தெரிவிக்கிறார். அவர் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன், பவுல் உலகப் பிரகாரமான கவுரவத்தையும், அந்தஸ்தையும், கனத்தையும் அடைய விரும்பினார். அவர் கிறிஸ்தவனாக மாறினபின் உலகத்தில் காணும் இந்த தகுதி பேராவல்களை "நஷ்டமென்று" எண்ணினார். (காண்க பிலிப்பியர் 3:4-8.) பவுலுக்கு ஒரு புதிய தகுதிபேராவல் இருந்தது: கிறிஸ்து மகிமைப் பட ஏதுவாக தான் ஜீவித்திருக்க விரும்பினார் (3:7-14). ஒவ்வொருவரும் இந்த நோக்கத்தை வாழ்க்கையில் பகிர்ந்து கொள்ளும்படி சூளுரைத்தார் (3:17-21).

எபேசியர்களுக்கு பவுல் எழுதும்போது இதே பேராவலை தெரியப் படுத்தினார். எபேசு பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களை தேவனும்

கிறிஸ்துவும் மகிமைப்படும்படி வாழ அறிவுறுத்தினார். இந்த இலக்கு இரண்டு சொற்றொடர்களால் வலியுறுத்தப்படுகிறது.

*"கிறிஸ்தவன் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரமாக நடந்து கொள்ள" வேண்டியவன் (4:1)* பவுல் முதலாவதாக, தமது வாசகர்களின் கவனத்தை கிறிஸ்தவன் வாழ்ந்து கொண்டுள்ள தனது வாழ்வின் தெரிவுகளை எப்படிப்பட்ட விளைவுகளுக்கு உட்படுத்துவது என்பதில் திருப்பினார். சுவிசேஷம் பாவிகளை கிறிஸ்தவனாக மாறும்படி அழைக்கிறது (2 தெசலோனிக்கேயர் 2:14). உலகத்தையும் அதன் காரியங்களையும் விட்டுவிட்டு கிறிஸ்துவின் சரீரத்தில் இடம் பெற்று கர்த்தருடைய காரியங்களுக்கேற்ப வாழத் துவங்குவதற்கான அழைப்பு இது (கொலோசெயர் 1:13). இந்த அழைப்பு மாபெரும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகிற மிகப் பெரும் சிலாக்கியம். இந்த அழைப்புக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரராய் நடந்துகொள்ள (அதாவது, வாழ) கடமைப்பட்டவர்கள், கர்த்தருக்கு அவப் பெயரை கொண்டு வராதபடிக்கு அப்படி வாழ வேண்டும். உதாரணமாக, திருடுகிறவர்கள் இனி திருடாமல், பொய் பேசுபவர்கள் இனி மெய்யையே பேசி, அசுத்தமாய் வாழ்ந்தவர்கள் இனி பரிசுத்தமாய் வாழ வேண்டும். கிறிஸ்தவனாக மாற தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் கொண்டுவரத் தக்க புதிய இலக்கை (தகுதி பேராவலை) கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறான் (கலாத்தியர் 6:14). நீங்கள் இப்பொழுது ஒரு கிறிஸ்தவனாக இருப்பதால், நீங்கள் செய்கிற அனைத்தும் தேவனுடைய முகத்தில் புன் முறுவலைக் கொண்டு வர வேண்டும் ஏனெனில் உங்கள் நடக்கை அவருக்குப் பிரியமுள்ளவைகள். உங்கள் வேலையில்? ... உங்கள் வீட்டில்? ... உங்கள் பொழுது போக்கு நிகழ்வுகளில்? ... உங்கள் நண்பர்களிடத்தில்? ... உங்கள் உடன் பணியாற்றுபவர்களிடத்தில்? எப்படி உங்களால் தேவனுக்கு கனத்தைக் கொண்டுவர முடியும்? கர்த்தர் அளிக்கும் இரட்சிப்பை அவரது சுவிசேஷத்தின் மூலம் உங்களை அழைக்கும்போது ஏற்றுக்கொள்ள தெரிந்து கொள்கிறீர்கள். அது உங்கள் பரிசுத்தமாக்கப்பட்ட தெரிவை செய்துகொள்ளும் கடமையை பிரதிபலிக்கிறது. அது வாழ்க்கையில் நீங்கள் கொண்டுள்ள நோக்கத்தை நிறைவேற்றும்.

*கிறிஸ்தவன் "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருக்க" வேண்டியவன் (4:3).* அடுத்ததாக பவுல் தகுதி பேராவலின் விளைவு கர்த்தருடைய சபையில் நிறைவேறுவதை பவுல் விளக்கப் படுத்துகிறார். கிறிஸ்துவின் சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் ஐக்கியத்தையும் ஒருமையையும் பராமரிக்க வேண்டியவர்கள். எப்படிப்பட்ட ஐக்கியமும் (ஒருமையும்) சரியென கட்டளையிடப்படவில்லை என்பதைக் கவனியுங்கள்; "ஆவியின் ஒருமையைக்" காத்துக் கொள்ள வேண்டியவன். தேவனுடைய ஆவியின் ஒருமை என்பது விசுவாசத்தின் எந்த சகிப்புத் தன்மையையும் அல்லது எண்ண வெளியீட்டையும் சமமானதாக்க குறிப்பிடுவதில்லை. வசனம் 4 லிருந்து 6 வரை, பவுல் குறிப்பாக ஏழு அடிப்படைக் கருத்துக்களைக் குறிப்பிட்டு அந்த "ஆவியின் ஒருமையின் மேல்" ஸ்தாபிதம் பெற்று காத்துக் கொள்ள வேண்டும்:

1. "ஒரே சரீரம்"
2. "ஒரே ஆவி"
3. "அழைக்கப்பட்ட ஒரே நம்பிக்கை"
4. "ஒரே கர்த்தர்"
5. "ஒரே விசுவாசம்"
6. "ஒரே ஞானஸ்நானம்"
7. "எல்லாருக்கும் ஒரே பிதாவாகிய தேவன்"

*இந்த ஏழு திறனாய்விகளாகிய "ஒன்றுகள்" மனிதனால் திருத்தியமைக்கப் பட்டு மெருகூட்டப்பட்டு புதிய ஏற்பாட்டில் ஆவியின் உபதேசத்தோடு ஒத்துபோகாத ஒருமையை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. ஒரு புதிய கிறிஸ்தவனாக, திருமறையில் போதிக்கப்படும் மார்க்க ஒற்றுமையைக் காத்துக் கொள்ள உதவி செய்ய நாம் கடமைப் பட்டிருக்கிறோம். இந்த தகுதி பேராவல் உங்கள் மனதின் ஆழத்தில் பதிக்கப் பட்டிருக்க வேண்டும், ஏனெனில் நீங்கள் தேவனுடைய வசனங்களைப் பின்பற்றும்படி தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்.*

## நிறைவுறும் சிந்தனைகள்

*மனிதனும் தேவனும் தெரிவு செய்யும் திராணியுள்ளவர்கள்! தேவன் தாம் தெரிந்து கொண்டதை வெளிப்படுத்தியிருக்கிறார். அவருடைய தெரிவு தெய்வீக ஒழுங்குகளுக்கு கீழ்ப்படிந்து "விசுவாசத்தினால் வாழ்பவர்களுக்கு" கொடுக்கப் படுகிறது (ரோமர் 1:17; காண்க 2 கொரிந்தியர் 5:7).*

*தேவன் தம்முடைய பிள்ளைகள் தம்முடைய தெய்வீக ஒழுங்குகளுக்கு கீழ்ப்படிதலைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அதற்குத் தேவையான சகலத்தையும் அவர் கொடுத்திருக்கிறார், எனவே நீதியின் "ஜீவியத்தை" பின்பற்றும்படி தெரிந்து கொள்ள வேண்டியதை விளக்கப் படுத்தியுள்ளார். வருத்தம் என்னவெனில், எல்லாருமே தேவனுடைய வழியைப் பின்பற்றத் தெரிந்து கொள்வதில்லை, கிறிஸ்தவர்கள் கூட சரியான தெரிந்து கொள்ளுதலை தொடருவதில் தவறுகிறார்கள். அப்படிப்பட்ட ஜனங்கள் சீனாய் மலை அடிவாரத்தில் இருந்த இஸ்ரவேலர்களைப் போன்றவர்கள். தேசம் தேவனைப் பின்பற்றி கீழ்ப்படிய தீர்மானித்திருந்தாலும் (யாத்திராகமம் 19:5-8), இஸ்ரவேலின் சில ஜனங்கள் கீழ்ப்படியாமையைத் தெரிந்து கொண்டிருந்தார்கள். குறுகிய காலத்தில், தேவனுக்குக் கீழ்ப்படிவதாக பொருத்தனை செய்திருந்த தேசம் விக்கிரகங்களுக்கு முழங்காலிடத் திரும்பினார்கள். இந்தத் துரோகத்தை மோசே அறிந்த போது, அவர்களை அழைத்து, "கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றார்!" (யாத்திராகமம் 32:26). இஸ்ரவேலர்கள் மீண்டும் ஒருமுறை தேவனுக்கு கீழ்ப்படிவதைத் தெரிந்து கொள்வதா வேண்டாமா என்று தீர்மானிக்க வேண்டியிருந்தது.*

*இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதால் தெரிவு செய்யும் நிலையில் இருக்கிறீர்கள். ஒவ்வொரு நாளும், பிசாசு உங்களைச் சேர்ந்து எடுத்த தெரிவுக்கு எதிராக மாறும்படியும், தவறுகளோடு ஒத்துப்போகும்படியும் தூண்டுவான். ஆகையால், ஒவ்வொரு நாளும், நீங்கள் உங்கள் ஒப்புக் கொடுத்தலைப் புதுப்பிக்க வேண்டியவராயும் உங்கள் தெரிவுகளை பரிசீலிக்க வேண்டியவராயும்*

*இருக்கிறீர்கள். நீங்கள் தானியேலும் அவரோடு பாபிலோனில் இருந்த அவருடைய மூன்று நண்பர்களைப் போலவும் இருக்கிறீர்கள். அந்நிய நாட்டின் மத்தியில் தேவனுக்கு அவர்களுடைய அர்ப்பணிப்பை இணக்கப்படுத்தும்படி வசீகரிக்கப்பட்டார்கள். அந்த நான்குபேரும் தேவனுக்கு தொடர்ந்து கீழ்ப்படிந்திருக்கத் தெரிந்து கொண்டார்கள், தவறான தெரிவுகளோடு தங்கள் தெரிவை ஒத்துப்போக மறுத்து நின்றார்கள் (தானியேல் 1:8; 3:17, 18)! மற்றொரு ஊக்கமளிக்கும் முன் உதாரணம் மோசே. "உலக சந்தோஷங்களை அனுபவிப்பதை" ஒத்துப்போக தன்னுடைய தேவபக்தியின் கொள்கைகளோடு ஒத்துப்போகக் கூடாது என்று அவர் தீர்மானித்தார். மோசேயின் எண்ணம், பாசம், தகுதிப்பேராவல் எல்லாமே தேவனைக் கனப்படுத்த எடுக்கும் தீர்மானத்தை அறிவுறுத்தியது (எபிரெயர் 11:24-26). நாமும் அப்படியே செய்வோம்!*